# அக்டோபர் – 13 – சனி

## புனித எட்வேட்

**இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் லூக்.11:28**

**முதல் வாசகம் : கலாத்தியர் 3 : 22 – 29**

சகோதர சகோதரிகளே!இயேசுக் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொள்வோருக்கு வாக்களிக்கப்பட்டவை நம்பிக்கையால் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே அனைத்தும் பாவத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுள்ளது என மறைநூல் கூறுகிறது.நாம் நம்பிக்கை கொள்வதற்கு முன்இ சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். வெளிப்பட இருந்த அந்த நம்பிக்கையை நாம் பெறும்வரை இந்நிலை நீடித்தது.இவ்வாறு, நம்பிக்கையின் அடிப்படையில் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவதற்காக நம்மைக் கிறிஸ்துவிடம் கூட்டிச்செல்லும் வழித்துணையாய்த் திருச்சட்டம் செயல்பட்டது.இப்பொழுது நாம் நம்பிக்கை கொண்டுள்ளதால் இனி நாம் வழித்துணைவரின் பொறுப்பில் இல்லை.ஏனெனில், கிறிஸ்து இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்.அவ்வாறெனில், கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப்பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்.இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்.நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களும் ஆபிரகாமின் வழித்தோன்றல்களுமாய் இருக்கிறீர்கள். வாக்குறுதியின் அடிப்படையில் உரிமைப்பேறு உடையவர்களாயும் இருக்கிறீகள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றும்
நினைவில் கொள்கின்றார்.

**நற்செய்தி : லூக்கா 11 : 27 - 28**

அக்காலத்தில் இயேசு மக்களோடு கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" என்று குரலெழுப்பிக் கூறினார். அவரோ, "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் " என்றார்.

**தியானம்:** கடவுள் மனிதனுக்கு எழுதிய அன்புக் கடிதமே திருவிவிலியம். திருவிவிலியம் என்பது தூய ஆவியால் தூண்டப்பட்டு மனித மொழிகளில் எழுதப்பட்ட வார்த்தைகள். எனவே தூய ஆவியானவரே திருவிவிலியத்தின் முதன்மை எழுத்தாளர். "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு. அது ஒருபோதும் மனித விருப்பத்தால் உண்டானது அல்ல." (2பேது.1:21). இந்த இறைவனுடைய வார்ததைகளே வாழ்வு தருகின்ற ஆவியையும் ஜீவனையும் கொண்டிருக்கின்றன. கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவக்கூடியது" (எபி.4:12). இப்படிப்பட்ட உன்னதமான சக்திவாய்ந்த இறைவார்த்தையை முதலில் நாம் கேட்க வேண்டும். இரண்டாவதாக இறைவார்த்தையை நாம் வாசிக்க வேண்டும். இறைவார்த்தையை கேட்பது, வாசிப்பது என்பது தகவல்களை அறிந்துகொள்வது, கேட்பது போன்றதல்ல மாறாக கடவுள் இந்த இறைவார்த்தையின் வழியாக இன்று எனக்கு என்ன சொல்லுகின்றார் என்று அவர் பாதத்தில் அமர்ந்து அவருடைய குரலைக்கேட்பது. மூன்றாவது அதனை வாழ்வாக்க முயற்சிப்பது. "எல்லாவகையான அழுக்கையும் உங்களிடம் மிகுந்துள்ள தீமையையும் அகற்றி உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்கவல்லது. இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:21-22). அன்னை மரியாள் ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு இதயத்தில் அதனை சிந்தித்து செயல்படுத்தியதால் பெண்களுக்குள் பேறுபெற்றவராக உயர்ந்து நிற்கிறார். இயேசுவை தனது உடலால் பெற்றுக்கொடுத்த பேற்றோடு இறைவனின் திருச்சட்டத்தை அல்லும் பகலும் தியானித்து அதனை செயல்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்ததால் எப்பெயருக்கும் மேலான பெயரை கடவுள் அவருக்கு அருளினார். எனவே அன்னை மரியாளைப்போல இறைவார்த்தையை நிதமும் தியானித்து ஆண்டவரின் குரலைக் கேட்டு அதனை நம் வாழ்க்கையில் செயல்படுத்த முயல்வோம்.